<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

<u>அசல் வழக்கு எண்.137/2024</u>

PW1 – திரு.அந்தோணிச்சாமி நாள். 06.02.2026

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>முதல் விசாரணை</u>

1. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சங்கதிகளை நிரூபண வாக்குமூலம் வாயிலாக இவ்வழக்கில் தாக்கல் செய்தேன். அந்த நிரூபண வாக்குமூலத்தில் இடம் பெற்றுள்ள கையெழுத்து என்னுடையது தான், அதில் கண்டுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் தாவா சொத்தின் கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் தாவா சொத்தின் பட்டா மாறுதல் உத்தரவு இணையவழி நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வீட்டு வரிரசீது அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கொடுத்த புகார் மனு கையிருப்பு நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை